


– வாழ்வோம்

ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு எதிராக டெல்லியில் நடைபெற்ற போராட்டத்தின்போது, செய்தி சேகரித்த ஊடகவியலாளர்களையும் காவல் துறையினர் குறிவைத்துத் தாக்கியுள்ளனர். அது தொடர்பாக, பத்திரிகையாளர்கள் சங்கங்கள் கண்டனம் தெரிவித்துவருகின்றன. இந்த அடக்குமுறை தொடர்பாக, எழுத்தாளர் ஆர்.அபிலாஷ் தனது முகநூலில் பதிவிட்டுள்ள கருத்திலிருந்து...

**இருளின் காலம்!**

``ஊடகவியலாளர்களைக் கொத்துக்கொத்தாகக் கைது பண்ணுகிறார்கள் எனும்போதே, நெருக்கடி நிலை ஆரம்பித்துவிட்டது ஊர்ஜிதம் ஆகிறது. அதுவும் போராட்டங்களைப் பதிவு பண்ணுவதற்குப் போனவர்களை, ஒட்டுமொத்தமாகப் போராடுபவர்களைத் தூக்கி சிறையில் வைப்பது, அவர்களைக் குறித்த விவரங்கள், காணொலிகள், செய்திகள் வெளிவராமல் பார்த்துக்கொள்வதே பா.ஜ.க. அரசின் திட்டம். இனி, அடுத்து என்னவெல்லாம் செய்வார்கள்? எதிர்க்கட்சிகளின் செயல்பாட்டாளர்களைக் கண்ட இடத்தில் கைது, மறைமுகமாகப் பல ஊடகங்கள் முடக்கம், மக்கள் சில பகுதிகளில் பயணிக்க மறைமுகத் தடை, எந்தெந்த விஷயங்கள் ஊடகங்களில் பேசப்படலாம் என்பதற்கான மறைமுக அறிவுறுத்தல் எனப் போகும். முடிவில்.. எதிர்க்கட்சிகள், தாம் ஆளும் மாநிலங்களில் போராடினால், ஆட்சிக்கலைப்பு நடக்கும். ஆளுநர் ஆட்சி வரும்.

இப்போதைக்கு நீதிமன்றங்கள் பிணை வழங்குவதால், சிறிது அவகாசம் போராளிகளுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் கிடைத்துள்ளது. வெளிவர முடியாத சட்டங்களில் கைது நடக்கும்போது, நிலைமை தீவிரமாகும். இனிமேல் பல்லாயிரம் பேர்கள், குறிப்பாக இளைஞர்கள், சிறையிலேயே வருடக்கணக்கில் இருக்க நேரிடலாம். காயங்கள், வலி, சிறை வாழ்க்கை, எதிர்காலம் பறிபோவது என இழப்புகள் ஏராளம். 50 ஆண்டுகளுக்குப் பின்னால் போகிறோம். அதைவிட படுமோசமான ஒரு காலகட்டத்தை நோக்கி போகிறோம்'' என்று குறிப்பிட்டு, தங்கள் எழுத்துகளில் இந்த மோசமான காலத்தை எழுத்தாளர்கள் பதிவுசெய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### 1986 இந்தி எதிர்ப்புப் போர்!




மா.ஜெயசந்திரன்

1986 ஆம் ஆண்டு, மதுரை வங்கி ஒன்றின் தமிழ்ப் பெயர்ப்பலகையை, வடமாநிலத்தின் எம்.பி.ஒருவர் பிடுங்கி எறிந்து காலால் மிதித்த செய்தி, தினசரி பத்திரிகையில் வெளியாகி கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அதைக் கண்டு, பொள்ளாச்சியில் நானும் நண்பர் 'தென்றல்' செல்வராஜும் 'தமிழ் இளைஞர் புரட்சிப் படை' எனும் பெயரில் 'இந்தி வெறி எம்.பி ஒழிக!' என்று எழுதிய உருவ பொம்மையை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ள பகுதியில் தூக்கிலிடும் போராட்டம் செய்தோம். அதைப்போலவே, 'தமிழ் இளைஞர் மன்றம்' என்ற பெயரில் நா.கார்த்திகேயன், மறைந்த ஆல்பர்ட் சேகர், கி.இளங்கோ ஆகியோர் 'இந்தி வெறியன்' கொடும்பாவியை எரித்தார்கள். மறுநாள், காவல் துறை எங்கள் அனைவரையும் கைதுசெய்து, 15 நாள் சிறையில் அடைத்தது. நாங்கள் விடுதலை ஆன நேரத்தில், பொள்ளாச்சியில் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்துக்காக வருகைதந்திருந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். சிறை சென்றுவந்த நாங்கள், மாவட்டச் செயலாளரான மு.கண்ணப்பனிடம், தலைவருடன் போட்டோ எடுக்க வேண்டும் என அனுமதி பெற்று, எடுத்துக்கொண்ட புகைப்படம்.

**– மா.ஜெயசந்திரன், 26-வது வட்டச் செயலாளர், பொள்ளாச்சி நகரம், கோவை மாவட்டம்.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# யார் கேட்க முடியும்?



**04**

## பேரறிஞர் பேனா

*ஜமீன் எடுபிடி : ஏம்மா, இது யாரு வீடு?*

*ஏழை மாது : ஏன், என் வீடுதான்.*

*ஜமீன் எடுபிடி : என்னம்மா இது! கொஞ்சம்கூட மட்டு மரியாதை இல்லாமே தெருவிலே, மாடும் கன்னும் கட்டி வைச்சிருக்கே?*

*ஏழை மாது : அடே, என்னப்பா இது! என் வீட்டு எதிரே, என் மாடு கட்டி வைச்சா, தப்பா? யாரை மரியாதைக் குறைவாக நடத்தினேன்?*

*ஜமீன் எடுபிடி : அட, யாரம்மா இது. சுத்த வம்புக்காரியா இருக்கே. ஜமீன்தாரய்யா வண்டி வரப்போவுது, இப்ப. வர்றப்போ, தடையா மாடு கட்டியிருக்கே. கண்டாரானா, என்னா சொல்லுவாரு?*

*ஏழை மாது : தப்புத்தாம்பா! இதோ, அவிழ்த்துப் புழக்கடைக்குத் துரத்தி விடறேன். ஜமீன் ஐயா, வண்டி வரப் போவது தெரியாமப் போச்சி.*

*ஜமீன் எடுபிடி : சுருக்கா, சீக்கிரம் ஆவட்டும்மா. டே! முனியா! வழியிலே ஏதாச்சும், கல்லு கில்லு கிடக்குதான்னு, பார்த்து அப்புறப்படுத்துடா, ஐயா வண்டி வரப்போவுது. அம்மா! கொஞ்சம் கூட்டிடு சுத்தமா! சாணி இருந்தா ஈ மொய்க்கும். ஐயா கண்ணிலே அசிங்கம் பட்டுதுனா, காலங்காத்தாலே, வாந்தி வந்துவிடும்.'*

***'யார் கேட்க முடியும்?'** என்ற ஆணவத்துடன் மதுராந்தகம், தாராபுரத்தில் முதலமைச்சர் விஜய் நடத்திய சாலைவலத்தை அப்படியே கண் முன் நிறுத்துகிறது, பேரறிஞர் அண்ணா எழுதிய **'யார் கேட்க முடியும்?'** நாடகம். 02.02.1947 **'திராவிட நாடு'** இதழில் பிரசுரமானது இந்த நாடகம்.*

*அ.தி.மு.க.வில் இருந்து த.வெ.க.வுக்கு கட்சி தாவியோரால் திட்டமிட்டு திணிக்கப்பட்ட இடைத்தேர்தலுக்காக 02.10.2026 அன்று மதுராந்தகத்திலும், 04.10.2026 அன்று தாராபுரத்திலும் சாலை வலம் என்ற பெயரில், பொதுமக்களுக்குத் தொல்லை தரும் வலம் சென்றார், முதலமைச்சர் விஜய். மதுராந்தகத்தில் 50 கிலோ மீட்டர் தொலைவுக்கும், தாராபுரத்தில் 30 கிலோ மீட்டர் தொலைவுக்கும் அந்தச் சாலைவலம் நடைபெற்றது.*

*சட்டமன்றத் தேர்தலின்போதே வீட்டை விட்டு வெளியே வராமல், பதுங்குகுழியில் இருப்பது போல பனையூர் வீட்டிலேயே இருந்துகொண்டவர், இடைத்தேர்தலுக்காக, ஏன் இப்படி குக்கிராமங்களைக்கூட விட்டுவிடாமல் வந்துகொண்டு இருக்கிறார்? எனப் பொதுமக்களே சலித்துக்கொண்டனர். சின்னஞ்சிறு இணைப்புச்சாலைகளைக்கூட விட்டுவிடாமல் தட்டிவைத்து அடைத்தனர். ஆள் இல்லாவிட்டால்கூட பரவாயில்லை, ஈ-காக்கா கூட இல்லாத இடங்களில் எல்லாம் இரும்புத் தடுப்புகளை வைத்து அடைத்தனர். அதிகாலையில் பால் ஊற்றச் செல்வோர் முதல், மாலை வேளையில் சாலையோரக் கடை வைத்து வியாபாரம் செய்வோர் வரை அனைவரும் அன்று வீட்டுக்குள்ளேயே முடங்கும் நிலை ஏற்பட்டது.*

*அண்ணா அன்று குறிப்பிட்ட அந்த ஜமீன்தார் இந்த பனையூர் பண்ணையார் தானோ எனப் பொருத்திக்கொள்ளும் அளவுக்கான பல சம்பவங்கள் 'யார் கேட்க முடியும்?' என்ற நாடகத்துடன் பொருந்திப்போகிறது. குறிப்பாக, கூட்டம் ஒன்றுக்காக ஜமீன்தார் தயாராவதை அண்ணா குறிப்பிடும் காட்சி, இன்றைய முதலமைச்சரின் அரசியல் வீட்டுப்பாடத்துடன் 100% ஒத்துப்போகிறது.*

*'ஜமீன்தார் வீட்டில் கணக்குப்பிள்ளையாக வேலைபார்க்கும் அய்யருடன் ஜமீன்தார் உரையாடும் காட்சியில்...*

***ஜமீன்தார் :** ஏய்யா! நான் ஏதாவது பேசணுமா, கூட்டத்திலே...*

**அண்ணாவின் கருத்தியல் மட்டும், தொலைநோக்குச் சிந்தனையோடு இல்லை, அவரின் கலைப்படைப்புகளுக்கும் இத்தனை தொலைநோக்கு ஒற்றுமைகள் இருக்கும் என்று அவரே எண்ணியிருக்க மாட்டார்.**

***அய்யர் :** ஆமாம். எல்லோரும் எதிர்பார்த்துண்டேன்னா இருப்பா...*

***ஜமீன்தார் :** ஏன். நான் போனா போறாதோ?*

***அய்யர் :** பேஷா போதும். நீங்க விஜயம் செய்யறதே, பெரிய கௌரவ மன்னா! ஆனா, இந்தக் காலத்திலே. ஏதாவது கொஞ்சம் பேசணும்னு சொல்லுவா. அப்படி ஒரு பழக்கமாயிண்டு இருக்கு.*

***ஜமீன்தார் :** என்ன பழக்கமோ, எழுவெடுத்த பழக்கம். நீ போய், உன் மகன் இருக்கானே.. கூட்டிக்கொண்டு ஓடிவா. அவன் பிரசங்கம் செய்யறானாமே.*

***அய்யர் :** அது சுத்த அதிகப் பிரசங்கியாச்சே. என்னமோ இவன்தான் சுய ராஜ்ஜியத்தைத் தாவிப் பிடிப்பவனாட்டமா பேசுபவன். காங்கிரஸாம் அவன். ஏதேதோ பேசறான்.*

***ஜமீன்தார் :** அவன் ஏதாவது பேசட்டும், எனக்கு வேண்டியதா இரண்டு வரி எழுதிவிட்டா, நான் படித்து விடறேன்.*

***அய்யர் :** சரி, இதோ போய் நான் அழைச்சுண்டு வர்றேன்.*

***ஜமீன் தார் :** 'அழைச்சிக்கிட்டு ஏன்யா வரணும். எழுதி எடுத்துக்கிட்டே வந்துவிடு.*

*என நீளும் அந்த உரையாடல்.*

இப்படி, எவரோ எழுதிக்கொடுப்பதை வைத்துத்தான், அதில் என்ன இருக்கிறது என்பதைக்கூட புரிந்துகொள்ளாமல் வசனம் போல ஒப்பித்துக்கொண்டிருக்கிறார், இன்றைய முதலமைச்சர் விஜய்யும். கடந்த தி.மு.க. ஆட்சியில் கூடுதல் மின் தேவையைப் பூர்த்தி செய்ய வெளிச்சந்தையில் கொள்முதல் செய்ததை ஊழல் என்று யாரோ எழுதிக் கொடுத்ததை அப்படியே வாசித்தார் விஜய். ஆனால், இன்று அவருடைய ஆட்சியில் வெளிச்சந்தையில் 3.5 ரூபாய்க்கு ஒரு யூனிட் மின் கொள்முதல் செய்வது விமர்சனமாகி இருக்கிறது. சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல் கொண்டவராக இருந்தால், நடைமுறை எதார்த்தம் அறியாமல், யாரோ எழுதிக்கொடுத்ததை அப்படியே வாசித்திருக்க மாட்டார் என்றும் கண்டனங்கள் எழுந்திருக்கின்றன.

அண்ணா கூறும் அந்த ஜமீன்தாருக்கும் இந்த நவீன பண்ணையாருக்கும் இன்னும் பல ஒற்றுமைகள் இந்த நாடகம் முழுவதும் தென்படுகின்றன.

அண்ணாவின் கருத்தியல் மட்டும், தொலைநோக்குச் சிந்தனையோடு இல்லை, அவரின் கலைப்படைப்புகளுக்கும் இத்தனை தொலைநோக்கு ஒற்றுமைகள் இருக்கும் என்று அவரே எண்ணியிருக்க மாட்டார்.

...தொடரும்

**ர.பிரகாசு**

## தெரிந்து கொள்வோம்

**01.01.1950** – கழக மாவட்ட மாநாடுகள் தொடக்கம்.

**02.12.1951** – தி.மு.க. தலைமை நிலையம் - அறிவகம் திறப்பு.

**20.04.1951** – புரட்சிக் கவிஞர் மணிவிழா.

**28.10.1952** – வண்ணை பாண்டியன் படுகொலை.

**05.08.1957** – பேரறிஞர் அண்ணா நடத்திய தண்டலம் மாநாடு.

**30.08.1957** – கலைவாணர் என்.எஸ்.கே. மறைந்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900